# பரஸ்பரம் கீழ்ப்படிதல் (5:21)

*கடந்த காலத்தில் நான் ''வேதாகமத்தை சரியாகப் புரிந்து கொள்ளுதல்'' என்ற தொடர் பாடம் ஒன்றை போதித்தேன், இது வேதாகமத்தை விளக்கும் அறிவியலுக்குப் புனை/கற்பனைப் பெயராக உள்ளது. இது, வேதாகமம் கூறுவது என்ன; அது அர்த்தப்படுத்துவது என்ன மற்றும் அது அவற்றிற்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பவற்றை கண்டறியும் வழிகளை மாணவர்களுக்குப் போதிக்கின்றது. வேதாகமத்தின் சில பகுதிகளைப் புரிந்து கொள்ளச் சிறிதளவு முயற்சியே தேவைப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, "களவு செய்யாதிருப்பாயாக" என்ற கட்டளை தெளிவானதாக/எளிமையானதாக உள்ளது. இது அர்த்தப்படுத்துவது என்ன என்பதைப் புரிந்து கொள்வதற்கு நமக்கு, வசனத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் என்ற தொடர் பாடம் தேவைப்படுவதில்லை.*

*அன்றாட வாழ்வில் நாம் யாவரும் விளக்கப்படுத்துதலை நடைமுறைப் படுத்துகின்றோம். அதில் சில எளிமையானதாக உள்ளது. நிற்கும்படி கூறுகின்ற அடையாளப் பலகையை வாசித்தல் என்பதற்கு அதிகமான விளக்கம் தேவைப்படுவதில்லை; அந்த அடையாளம் எதனை அர்த்தப் படுத்துகின்றது என்பதை நாம் உடனடியாக அறிகின்றோம். பிற சூழ்நிலை கள் நம்மிடம் அதிகமானவற்றைக் கேட்கக் கூடும். உட்கரு இயற்பியல் பற்றிய புத்தகம் ஒன்றை வாசித்துப் புரிந்து கொள்வதற்கு அதிகமான முயற்சி தேவைப்படும்.*

*நாம் 5:21 என்ற ஒரு வசனத்தைப் பற்றி நினைத்துப் பார்ப்போம். இது புரிந்து கொள்வதற்குக் கடினமானதாயிருப்பதில்லை. இதைப் புரிந்து கொள்வதில் அல்ல ஆனால் இந்த போதனையை வாழ்வதில்தான் அறைகூவல் உள்ளது.*

*இவ்வசனமானது ''ஆவியினால் நிறைந்து'' என்ற பவுலின் புத்தி கூறுதலினுடைய சந்தர்ப்பப் பொருளில் தோன்றுகின்றது. 5:18ல் பவுல், "துன்மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" என்று கூறினார். பின்பு பவுல், ஆவியினால் நிறைந்து வாழ்வதின் செயல் விளைவுகள் சிலவற்றை விவரித்தார்.*

*முதலாவது, ஆவியினால் நிறைந்த வாழ்வு என்பது ஒருவரோடொருவர் ஆவிக்குரிய வழிகளில் பேசுவதன் ஐக்கியத்திற்கு வழிநடத்துகின்றது. நாம் பாடுகையில், நாம் ''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து'' (5:19அ) க்*

கொள்ளுகிறோம். இருதயத்தில் கர்த்தருக்கு கீர்த்தனம் பண்ணுதல் என்பது இரண்டாவது செயல்விளைவாக உள்ளது. எல்லாவற்றிற்காகவும் தேவனுக்கு நன்றி செலுத்துதல் (5:20) என்பது மூன்றாவது செயல்விளைவாக உள்ளது, மற்றும் நான்காவது செயல்விளைவு வசனம் 21ல் காணப்படுகின்றது. இது நிற்கச் சொல்லும் அடையாளக் குறி போன்றதாக உள்ளது; இதைப் புரிந்து கொள்வதற்கு அதிகமான முயற்சி தேவைப்படுவதில்லை. இது நான்கு தெளிவான எளிமையான வார்த்தைகளைக் கொண்டுள்ளது: "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்."

## ஒரு தெளிவான கட்டளை

பவுல், ஆவியினால் நிறைந்திருத்தல் என்பது பிறர் நிமித்தம் நமது சுய விருப்பங்களை விட்டுக் கொடுத்தல் என்பதற்கு நம்மை வழிநடத்துகின்றது என்ற கருத்தைக் கொண்டிருந்தார். "கீழ்ப்படிதல்" அல்லது "ஒப்புவித்தல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது[1] தோற்றத்தில் ஒரு இராணுவச் சொற்றொடராக இருந்தது. இது "கீழே வகைப்படுதல்" என்று அர்த்தப்படுத்திற்று. ஆவியினால் நிறைந்த கிறிஸ்தவர்கள் தங்களை ஒருவர் பிறரின் கீழ் வகைப்படுத்திக் கொள்ளுகின்றனர். அவர்கள் தங்கள் சொந்த வழியில் செல்லுதல் என்ற விஷயத்தைத் தேர்ந்து கொள்வதில்லை.

இது அர்த்தப்படுத்துவது என்ன என்பதை நாம் யாவரும் அறிகின்றோம். இதை நடைமுறைக்குக் கொண்டு வருதல் என்பதுதான் நாம் எதிர்கொள்ளுகின்ற மிகப் பெரிய அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது, ஏனென்றால் நமது உரிமைகளை வலியுறுத்தும் கருத்தை நமது இருதயங்களில் வலிவாய்ச் செலுத்துகின்ற ஒரு உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டுள்ளோம். மற்ற யாரேனும் பெறுவதற்கு முன்னர் நாம் நம்மால் இயன்ற எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டு விட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளோம்.

நான் ஒரு பண்ணையில் வளர்ந்ததில்லை, ஆனால் ஒருவேளை நீங்கள் அவ்வாறு வளர்ந்திருக்கலாம். நீங்கள் கோழிக் குஞ்சுகளைக் கொண்டிருந்தால், தானியக் களஞ்சியத்தில் கொத்தும் முறைமை ஒன்றிருப்பதை நீங்கள் அறிவீர்கள். மேலுள்ள கோழிக் குஞ்சானது எதை வேண்டுமானாலும் கொத்த முடியும், விளைவுகளைப் பற்றி வருத்தப்படத் தேவையில்லாதும் இருக்கும். கீழே உள்ள கோழிக் குஞ்சானது தீவிரமான விளைவுகள் இன்றி ஏதொன்றையும் கொத்த முடியாது. மேலுள்ள மற்றும் கீழுள்ள கோழிக் குஞ்சுகளுக்கிடையில் (மற்ற) எல்லாக் கோழிக்குஞ்சுகளும் ஏதோ ஒரு வகையில் வரிசை அமைத்து நிற்கின்றன. இரு கோழிக் குஞ்சுகளுக்கிடையில் தரையில் ஏதேனும் தானியம் கிடந்தால், கொத்தும் முறைமையில் உயர் வரிசை நிலையில் உள்ள கோழிக் குஞ்சு அதைப் பெற்றுக் கொள்கின்றது. இன்னொரு கோழிக் குஞ்சு அதை எடுக்க முயற்சி செய்தால், அவைகளுக்கிடையில் சண்டை வெடிக்கின்றது. சண்டை முடியும் பொழுது, வென்ற கோழிக் குஞ்சு கொத்தும் வரிசை முறையில் தன் இடத்தைக் காத்துக்

கொள்கின்றது அல்லது மேலே முன்னேறிச் செல்லுகின்றது.

தானியக் களஞ்சியத்தில் கோழிக் குஞ்சுகளுக்கிடையில் நடைபெறும் இதே விஷயம் மனிதர்களுக்கு இடையிலும் ஒவ்வொரு நாளிலும் நடைபெறுகின்றது. உலகப் புகழ்பெற்ற டல்லாஸ் கௌபாய்ஸ் கால் பந்துக் குழுவினர் ஒரு புதிய தலைமைப் பயிற்சியாளரைப் பெற்றுக் கொண்ட நிகழ்ச்சியை நான் நினைவு கூறுகின்றேன். பயிற்சி முகாமில் உதவிப் பயிற்சியாளர்கள் யாவரும், யார் மிக உயர்ந்த உதவியாளராக இருப்பார் என்பதைக் காண முயற்சி செய்து பதவிக்காகப் பந்தயமிட்டுக் கொண்டிருந்தனர். பணியிடங்களில் எல்லாக் காலத்திலும் இது நடை பெறுகின்றது, மற்றும் இதே விஷயத்தை நாம் பள்ளிகளிலும் காண முடியும் - மக்கள் தங்கள் வழியை அடிக்கடி பெற்றுக் கொள்ளும் பொருட்டு செல்வாக்கின் தகுதிகளுக்கு முண்டியடித்துக் கொண்டு தங்களை வெளிக் காட்டுகின்றனர்.

கிறிஸ்தவர்கள் அவ்வாறான வகையில் வாழ்வதைத் தேர்ந்து கொள்ளக் கூடாது என்று நாம் புரிந்து கொள்ள வேண்டுமென்று பவுல் விரும்பினார். விஷயங்களை நாம் விரும்பும் வகையில் வரிசையில் அமைக்கப்படுவதற்கு நாம் திட்டமிட்டு உழைப்பதில்லை. கிறிஸ்தவர்கள் இவ்விளையாட்டை விளையாட மறுக்கின்றனர். ஒருமுறை இயேசுவின் சீஷர்களில் இருவர் இதைச் செய்தனர்:

> அப்பொழுது செபதேயுவின் குமாரராகிய யாக்கோபும் யோவானும் அவரிடத்தில் வந்து: "போதகரே, நாங்கள் கேட்டுக் கொள்ளப்போகிறதை நீர் எங்களுக்குச் செய்யவேண்டுமென்று விரும்புகிறோம்" என்றார்கள். அவர் அவர்களை நோக்கி: "நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவர்கள்: "உமது மகிமையிலே, எங்களில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும் ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி எங்களுக்கு அருள்செய்யவேண்டும்" என்றார்கள் (மாற்கு 10:35-37).

யாக்கோபும் யோவானும் மற்றவர்களை விட உயர்வான இடத்தில் தங்களை வரிசைப்படுத்திக் கொள்ள விரும்பினார்கள். வரப் போகிற இராஜ்யத்தில் மேலான கோழிக்குஞ்சுகளாக இருக்க அவர்கள் விரும்பினார் கள். தங்களுக்குக் கிடைக்கக் கூடிய எல்லாவற்றையும் பெற்றுக் கொள்ள அவர்கள் விரும்பினார்கள். வாழ்க்கைக்கு ஒரு புதிய அணுகுமுறையை இயேசு அவர்களுக்குக் காட்ட வேண்டியிருந்தது:

> புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்து கிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக் கடவன். அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படி

*வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார் (மாற். 10:42ஆ-45).*

*இயேசு அவர்களிடத்தில், ''இது இராஜ்யத்தில் செயல்பாட்டுக்கு உதவாது. இது கடந்த காலத்தின் வழிமுறையாக இருந்துள்ளது, ஆனால் இராஜ்யம் என்பது மாறுபட்டதாக உள்ளது. இராஜ்யத்தில் பெற்றுக் கொள்ளுதல் என்பது கொடுத்தலைப் போன்று அவ்வளவு முக்கியமானதாக இருப்பதில்லை" என்று கூறினார்.*

*ஆவியினால் நிறைந்த மக்கள் தங்கள் சொந்த வழியைப் பெறுவதை வலியுறுத்துவது இல்லை. அவர்கள் முதலாவது பிறரைக் கண்ணோக்கு கின்றார்கள். அவர்கள் "ஒருவருக்கொருவர் கீழ்ப்பட்டிருக்கின்றார்கள்."*

*மீண்டும் 5:21ஐ வாசியுங்கள். பரஸ்பரம் கீழ்ப்படிதலுக்கான தெளிவான நோக்கத்தைக் கவனியுங்கள்: "தெய்வ பயத்தோடே." இது நேர் மறையான அர்த்தத்தில் "தெய்வ பயத்தின் விளைவாக" என்று கூறுகின்றது. Phobos என்பது "பயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை யாக உள்ளது. இது நமக்கு "Phobia" என்ற ஆங்கில வார்த்தையைத் தருகின்றது. பயம் என்பது "மரியாதை" என்பதை விட அதிகக் கனமுடைய தாக உள்ளது. சாலொமோன், "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே" (பிர. 12:13ஆ) என்று கூறினார். தேவனுக்குப் பயப்படுதல் என்றால் தேவனை (அவரது கட்டளைகளை) தீவிரமாய் மேற்கொள்ளுதலாக உள்ளது. தேவன் யார் என்பதையும் நாம் யார் என்பவற்றையும் நாம் கணக்கில் கொள்ளு கின்றோம், அது நம்மை முழங்காலிடச் செய்கின்றது. அது தேவனைப் பற்றித் தீவிரமான சிந்தனை மேற்கொள்வதை விளக்குகின்றது. சாராம் சத்தில் பவுல் நமக்கு, "நீங்கள் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிகின்ற பொழுது கிறிஸ்துவைப் பற்றித் தீவிரமாய்ச் சிந்திக்கின்றீர்கள் என்பதை காண்பிக் கின்றீர்கள்" என்று கூறுகின்றார்.*

*பிறருடனான நமது எல்லா உறவுகளிலும் கீழ்ப்படிதலுள்ள எண்ணப் போக்கொன்று தேவையாக உள்ளது. உங்கள் இல்லத்தில் நீங்கள் ஒரு ஊழியக்காரராக இருக்கின்றீர்களா? நீங்கள் பணிபுரியும் இடத்தில் அல்லது படிக்கின்ற பள்ளியில் மக்கள் உங்களை, பிறரிடமிருந்து பெற்றுக் கொள்பவர் என்பதற்குப் பதில் பிறருக்குக் கொடுப்பவர் என்ற நினைவில் அதிகம் வலியுறுத்தம் வைக்கின்றார்களா? உள்ளூர் சபையைப் பற்றிய விஷயம் என்ன? அதிலிருந்து நீங்கள் என்ன பெற்றுக் கொள்ளலாம் என்பதற் காக நீங்கள் அங்கு இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் சகோதர சகோதரி களின் தேவைகள், அக்கறைகள் மற்றும் உணர்வுகள் ஆகியவற்றைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்கின்றீர்களா?*

*சபையானது பரஸ்பரம் கீழ்ப்படிதலுக்கான பயிற்சிக் களமாக உள்ளது. எல்லா வகைப்பட்ட மக்களையும் தேவன் சபைக்குள் ஒன்றாகக் கூட்டிச் சேர்க்கின்றார். நாம் ஒருவரையொருவர் மதிக்கவும், கனப்படுத்தவும் மற்றும் ஒருவருக்கொருவர் அர்ப்பணிக்கவும் கற்றுக் கொள்ளுகின்றோம்.*

"நான் எனது வழியில் சென்றால் நல்லது இல்லையென்றால் நான் மகிழ்ச்சியாய் இருக்க மாட்டேன்" என்று உலகப் பிரகாரமான சிந்தை அமைவு சபைக்குள் நாம் நம்முடன் கொண்டு வரக் கூடிய மிக மோசமான எண்ணப் போக்காக உள்ளது. அது கிறிஸ்துவின் ஆவியை அல்ல, இந்த உலகத்தின் ஆவியையே தழுவிக் கொள்வதாக உள்ளது.

## ஒரு தனிப்பட்ட விளக்கவுரை

5:21ன் மீதான மிகச் சிறந்த விளக்கவுரையானது பிலிப்பியர் 2ல் காணப்படுகின்றது. பிலிப்பியர் நிருபமானது பவுல் எபேசியருக்கு நிருபத்தை எழுதிய காலத்திற்கு அண்மையில் எழுதப்பட்டது. நாம் உறவு முறைகள், பிறருடன் ஒத்துப் போகுதல் மற்றும் பெறுதலின் எண்ணப் போக்கிற்குப் பதிலாகக் கொடுத்தலின் எண்ணப்போக்கைக் கொண்டிருத்தல் ஆகியவற்றில் சிரமப்படுவது போன்றே தொடக்க காலத் திருச் சபையும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது என்பது தெளிவு. பவுல் பின்வருமாறு எழுதினார்:

> ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத் தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறனுக்கானவைகளையும் நோக்குவானாக (பிலி. 2:3, 4).

அது ஒருவருக்கொருவர் கீழ்ப்படிதலின் கருத்தை விளக்கப் படுத்துகின்றது. இப்பொழுது, கீழ்ப்படிதலுக்குப் பின்னால் உள்ள நோக்கத்தைக் கவனியுங்கள். இது கிறிஸ்துவினுடையதாக உள்ளது.

> கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசு கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும் எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார் (பிலி. 2:5-11).

பரஸ்பரம் கீழ்ப்படிதல் என்பது தாழ்மை குணத்துடன் வருகின்றது. தாழ்மை என்றால் என்ன என்று இயேசு நமக்குக் காண்பித்தார். அது ஆவியினால் நிறைந்த வாழ்வின் அடையாளமாக உள்ளது. தாழ்மையில்லையென்றால், மக்களுடனான நமது உறவுகள் தேவன் விரும்புகின்ற வகையில் இருக்காது. அது நம்மை (சரியான) பாதையில் வைத்துக்

*காக்கின்றது. அது நம்மை (சாரம் இல்லாத வெற்று) போதனைச் சட்டத்தைக் கைக் கொண்டு மூடிய சிந்தையுள்ளவர்களாய் இருத்தலில் இருந்து காத்துக் கொள்கின்றது. தாழ்மை என்பது நாம் பிறரின் உறவுகளை உணர்ந்தறியச் செய்கின்றது. அது நம்மைப் பிறரின் குறைபாடுகளைச் சகித்துக் கொள்ளும்படிக்கு உதவுவது டன் நம்மை நமது சுயத்தை நாடும் வழிகளில் இருந்து விடுவிக்கின்றது. தாழ்மை என்பது நாம் ஒருவரையொருவர் (சுலபமாய்) அணுகச் செய்வது டன் ஒருவருடன் ஒருவர் வாதிடாமல் இருக்கவும் உதவுகின்றது.*

*இது நாம் பிறரிடத்தில் காணக் கூடிய ஒவ்வொரு பிழையையும் தவறையும் ஆராய்ச்சி செய்யக் காரணமாவதற்குப் பதிலாக, மற்றவர்களைக் கிருபையின் ஆவியுடன் கண்ணோக்கக் காரணமாகின்றது. தாழ்மை என்பது நாம் ஒருவருக்கொருவர் மிகச் சிறந்தவற்றை நாடும்படி நம்மைத் தூண்டுவதுடன், யூகம், புறங்கூறுதல், பதவிகளுக்காக போட்டியிடுதல் ஆகியவற்றினின்று நம்மைப் புறம்பே விலக்கிக் காத்துக் கொள்ளுகின்றது. தாழ்மை என்பது கிறிஸ்துவின் மீதான பயபக்தியினிமித்தம் ஒருவருக் கொருவர் கீழ்ப்படிதலாக உள்ளது.*

*நமது இல்லங்களில், மக்களுடன் நம் அன்றாட பழக்கங்களில் மற்றும் சபையில் நாம் தாழ்மையைக் காட்சிப்படுத்த வேண்டியது அவசியமாக உள்ளது.*

## ஒரு நடைமுறைக்கான ஆழ்ந்த சிந்தனை

*“தெய்வ பயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருங்கள்” (5:21). இது தெளிவானதாகக் காணப்படுகிறது அல்லவா? இதை நடைமுறைக்குக் கொண்டு வருவதை விட இதைப் புரிந்து கொள்ளுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது. இதை ஒவ்வொரு நாளும் வாழ்வதில் நன்கு செயல்பட நமக்கு உதவுகின்ற மூன்று கருத்துக்களை நாம் காண்போம்:*

*1. இயேசுவின் போதனைகளுக்கு எதிராகச் சொல்லுகின்ற உலகப் பிரகாரமான சிந்தை அமைவில் இருந்து வெளியேறும் விருப்பத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இது உண்மையிலேயே என்னவாக உள்ளது என்பதை நாம் காணாத வரையில் நாம் அநேகமாக நமது சுயவழியையே நியாயப்படுத்தி வலியுறுத்திக் கொண்டிருப்போம்.*

*2. ஒவ்வொரு உறவுமுறைக்குள்ளாகவும் பின்வரும் கேள்வியைக் கேட்டு உள் நுழையுங்கள்: ‘‘இந்த நபருக்கு என் மூலமாக எதைக் கொடுக்கும்படிக்கு இயேசு விரும்புகின்றார்?’’*

*3. பின்வரும் வேண்டுகோளுடன் அன்றாட ஜெபத்தில் கர்த்தருக்கு முன் வாருங்கள்: ‘‘நான் எவ்விடத்தில் பிறருக்கு நீர் விரும்பும்படி கீழ்ப்படியாமல் உள்ளேன் என்று எனக்குக் காண்பியும்.’’ பிறருடனான உங்கள் நடவடிக்கைகளில் எவ்விடத்தில் நீங்கள் மாற்றங்கள் சிலவற்றைச் செய்ய வேண்டியது அவசியம் என்று காண இயேசு உங்களுக்கு உதவுவாராக.*

## முடிவுரை

நாம் தேவனுடன் கொண்டுள்ள உறவுதான் இவ்வாழ்வில் மிகவும் முக்கியமான உறவாக உள்ளது. நாம் தேவனுக்குப் பயந்து அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ள வேண்டும். தேவன், இயேசுவைப் பற்றி, "இவர் என் குமாரன்; இவருக்குச் செவி கொடுங்கள்" என்று அறிவித்தார். நாம் இயேசுவுக்குச் செவி கொடுத்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். நமது வாழ்வானது இயேசுவுடன் சரியாய் இராதவரைக்கும் இவ்வாழ்வில் நமது பிற உறவுகள் எதுவும் அது இருக்க வேண்டிய பிரகாரம் இருக்காது.

உங்கள் வாழ்வை இயேசுவுக்கு அர்ப்பணியுங்கள். அவர் பாவங்களுக்கு மன்னிப்பையும் வாழ்வில் ஒரு புதிய தொடக்கத்தையும் வழங்குகின்றார். அவருக்குச் செவி கொடுத்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள். இயேசு, "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்" (இ.வ. மாற். 16:15, 16) என்று கூறினார். நீங்கள் அவருடைய கட்டளைக்குக் கீழ்ப்படிந்திருக்கின்றீர்களா?

கிறிஸ்தவர் என்ற வகையில் நீங்கள் வசனம் 21ன் மூலம், கிறிஸ்துவுக்குப் பயபக்தியைக் காண்பிக்காத(வராயிருந்தால்) குற்றம் உணர்த்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் சமீபத்தில் உங்கள் வழியை வலியுறுத்தி பிறரைக் குறித்து அக்கறையற்று இருந்திருக்கலாம். இது ஒரு யுத்தமாக உள்ளது. நாம் யாவரும் சுயநலம் என்ற உணர்வுடன் போராட்டம் நடத்துகின்றவர்களாய் இருக்கின்றோம். உங்கள் தனிப்பட்ட போராட்டத்தில் உங்களைப் பெலப்படுத்தும்படி ஜெபத்தில் கர்த்தரிடம் கேளுங்கள். "தெய்வ பயத்துடனே ஒருவருக்கொருவர் கீழ்ப்படியுங்கள்." மக்கள் ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது அது நடைபெறுகிறது.

---

குறிப்பு

[1]Hupotasso என்பது இந்தக் கிரேக்க வார்த்தையாக உள்ளது. இது தனது இராணுவப் பயன்பாட்டில் மேலான அதிகாரிக்குக் கீழ்ப்படிவதைக் குறித்தது. இது அடிமைகள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிவது என்பதில் பயன்பாடு கொண்டிருந்தது. இது ஒருவர் தனது சொந்த உரிமை அல்லது விருப்பத்தை விட்டுக் கொடுப்பதைக் கூறக் கூடியதாக உள்ளது.